X-4F  ப.எண். [ | | | | | | ]  T

# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 4

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி  மதிப்பெண்கள் : 100

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.  15x1=15
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. சம்பா நெல்லின் உள் வகைகள் எத்தனை?
அ) 30  ஆ) 60  இ) 40  ஈ) 80

2. 'பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடாதிருந்து விட்டேன்'' என்று வருந்திய கவிஞர்
அ) தனிநாயக அடிகள்  ஆ) இளங்குமரனார்
இ) தேவகோட்டை வா.மூர்த்தி  ஈ) பாரதியார்

3. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ'' - என்று குறிப்பிடும் நூல் எது?
அ) நற்றிணை  ஆ) பதிற்றுப்பத்து  இ) பரிபாடல்  ஈ) குறுந்தொகை

4. "கருவளர் வானத்து இசையில் தோன்றி,
உரு. அறிவாரா ஒன்றன் ஊழியும்'' - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள இலக்கிய நயம்
அ) எதுகை  ஆ) மோனை  இ) இயைபு  ஈ) அந்தாதி

5. பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர்
அ) தஞ்சாவூர்  ஆ) திருமறைக்காடு
இ) திருத்துறைப்பூண்டி  ஈ) திருவண்ணாமலை

6. 'சிறு பண்டி சரிந்தாடப்' என்பதில் "பண்டி'' என்பதன் பொருள்
அ) வயிறு  ஆ) பெருக்கம்  இ) தலை  ஈ) சுருக்கம்

7. பாடாண்திணை பிரித்து எழுதுக.
அ) பாடாண் + திணை  ஆ) பாடாண் + ஆண் + திணை
இ) பாடு + ஆண் + திணை  ஈ) பாட + ஆண் + திணை

8. நிரை, நிரை, நிரை ......................
அ) புளிமாங்கனி  ஆ) தேமாங்கனி  இ) கருவிளங்கனி  ஈ) கூவிளங்கனி

9. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ................ எனப்படும்.
அ) வழு  ஆ) வழுநிலை  இ) வழுவமைதி  ஈ) வழாநிலை

10. பொருத்துக:
1) காக்கென்று - i) இடைக்குறை
2) கணீர் - ii) தொகுத்தல் விகாரம்
3) காய்மணி - iii) வேற்றுமைத் தொகை
4) மெய்முறை - iv) வினைத்தொகை
அ) 1 - ii 2 - i 3 - iv 4 - iii  ஆ) 1 - iv 2 - i 3 - ii 4 - iii
இ) 1 - ii 2 - i 3 - iii 4 - iv  ஈ) 1 - i 2 - iii 3 - ii 4 - iv

11. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது .................... வினா. "அதோ அங்கே நிற்கும்'' என்று மற்றொருவர் கூறியது ........................ விடை.
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல்  ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை  ஈ) கொளல்வினா, இனமொழிவிடை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்

வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்

திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்

எழுதல் முன் மகிழ்வன செப்பல்

பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்

12. இப்பாடலின் ஆசிரியர் ...................

அ) பெருங்கௌசிகனார் ஆ) நப்பூதனார்

இ) அதிவீரராமபாண்டியர் ஈ) நல்வேட்டனார்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ...................

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

14. 'நன்மொழி - இலக்கணக் குறிப்பு தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

15. அருகுற என்பதன் பொருள் யாது?

அ) ஓவியம் ஆ) சிற்பம் இ) அருகில் ஈ) விரைவில்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்:** 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) இணைய பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின.

ஆ) பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

17. கூடா நட்பு குறித்து வள்ளுவர் கூறும் செய்தி யாது?

18. "நேற்று நான் பார்த்த அர்ச்சனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.

19. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

21. 'அருமை' ....... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5x2=10

22. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23. பழமொழிகளை நிறைவு செய்க :

அ) அளவுக்கு ............................ ஆ) ஒரு பானை ..................................

24. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.

அ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

ஆ) அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள்.

25. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

அ) இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)

ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

26. கலைச்சொற்கள் தருக.

1) Folk literature 2) Epic literature

27. உவமையைச் சொற்றொடரில் உருவாக்குக.

1) மழைமுகம் காணாப்பயிர்போல 2) சிலைமேல் எழுத்து போல

28. தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2x3=6

29. மினசோட்டா 'வாழையிலை விருந்து விழா' பற்றி எழுதுக.

30. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.



31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

2016 - ல் ஐ.பி.எம். பகுதியைப் படித்து செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது. மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ வீட்டுக்கு வணிகத்துக்கு படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.

***வினாக்கள் :***

1) ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியின் பெயர் என்ன?

2) வாட்சன் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடிக்க எத்தனை தரவுகளை அலசியது?

3) பெப்பர் என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நிறுவனம் எது?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்:** 2x3=6

32. "தூய்மணி யாகத் தூவும்
துளியிலது இளங்கூழ் வாடி" - என்ற உவமையை விளக்கிப் பொருளோடு பொருத்துக.

33. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக:

'வெய்யோன் ஒளி' .. எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

**(அல்லது)**

'அருளைப் பெருக்கி' ... எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2x3=6

35. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

36. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :** 5x5=25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.



41. நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக. **(அல்லது)**

ஆ) மொழி பெயர்க்க :

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க:** 3x8=24

43. அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக. **(அல்லது)**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. **(அல்லது)**

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

| மகளிர் நாள் விழா | |
|---|---|
| இடம் : பள்ளிக் கலையரங்கம் | நாள் : 08.03.2019 |
| கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை- ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை. | |

45. அ) தமிழின் இலக்கிய வளம் - கல்விமொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

★★★★★